வசூலிக்க சிலபல கமிட்டிகள் இருக்கின்றன. அவை, மக்கள் மனமுவந்து கொடுக்கும் பொருள்களை—பணத்தைப் பெற்று நல்ல காரியங்களுக்குச் செலவு செய்கின்றன. உதாரணமாகப் பள்ளிச் சீரமைப்பு குழு ஒன்று இயங்கி வருகிறது. அது அவ்வப்போது மாநாடுகளைக் கூட்டி நிதி வசூலிக்கிறது. பத்து ஆண்டுகளில் கிட்டத்தட்ட 14 கோடி ரூபாய் சேர்த்திருப்பதாகத் தெரிகிறது. அதைப்பற்றி யாரும் குறை சொல்லவில்லை. கட்டாயமாகப் பணம் கொடுத்தால்தான் இடம் கொடுப்போம் என்று மாணவர்கள் சேருகின்றபோது சொல்வதாகப் புகார்கள் வருகின்றன. இப்படிப்பட்ட புகார்களை எப்படித் தடுப்பது என்றுதான் அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது. பல்கலைக்கழகத்தோடு சேர்ந்து இதற்கு முடிவு கட்டவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இந்த விரிவானப் பதிலுக்குப் பின்னால் துணைக் கேள்விகளுக்கு இனி இடமில்லை. அப்படித் துணைக் கேள்விகள் கேட்டாலும் இந்தப் பதிலுக்குள்தான் அடங்கும். இந்தப் பதிலுக்குள் வராத கேள்வியாக இருந்தால், மூலக்கேள்விக்கும் அதற்கும் சம்பந்தம் இருக்காது.

தனியார் கல்லூரிகள்.

* 495 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் நடத்தும் கல்லூரிகளை அரசு ஏற்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனியார் கல்லூரிகளை ஏற்று நடத்தும் உத்தேசம் அரசுக்கு இல்லை

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தனியார் சிலர் கல்லூரிகளை வியாபார நோக்கோடு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மாணவர்களிடமிருந்து கட்டாயமாகப் பணம் வசூல் செய்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுப்பது கிடையாது . ஆகவே கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தையாவது யூனிவர்சிட்டியிலிருந்து நேரடியாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் வகைசெய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்லூரிகள் எப்படி இயங்கவேண்டும் என்று விதிமுறைகளை ஏற்படுத்துவதோ ஒழுங்குபடுத்துவதோ பல்கலைக் கழகத்தைச் சார்ந்தது. அதில் அரசாங்கம் தலையிட முடியாது. அரசாங்கம் வேண்டுமானால் அம்மாதிரிக் கல்லூரிகளுக்கு அங்கீகாரத்தை மறுக்கலாம்; மானியத்தை நிறுத்தலாம். அப்படிச் செய்வதனால் மாணவர்களும், அந்தக் கல்லூரியிலே பணியாற்றுபவர்களும் கஷ்டப்படுவார்கள். கல்லூரிகளை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்குச் சட்டத்தில் இடமில்லை. அதற்குச் சட்டத்தில் வகை ஏற்பட்டால் அப்போது இதுபற்றி யோசிக்கலாம். எல்லாக் கல்லூரிகளுமே மோசமாக நடைபெறுகின்றன என்று சொல்லமுடியாது. சிலபல தனியார் கல்லூரிகள் நல்லமுறையிலே செயல்பட்டு வருகின்றன. எல்லாக் கல்லூரிகளையும் அரசாங்கம் ஏற்பது என்பதும் இயலாது.

திரு. எஸ். வடிவேல் : தலைவர்வர்களே, சில தனியார் கல்லூரிகளில் ஒரு மாணவரிடமிருந்து 500 ரூபாய் ஆயிரம் ரூபாய் என்று கட்டாயமாக வசூலிக்கிறார்கள். இது மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியாததல்ல. என்னைக்

காட்டிலும் அமைச்சரவர்களுக்கு நல்ல அனுபவம் உண்டு என்பது எனக்குத் தெரியும். எனவே அமைச்சரவர்கள் இதுபற்றித் தெரியாது என்று சொல்ல முடியாது. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் குறிப்பாகக் கேள்வி மட்டும் தான் கேட்கலாம். கேள்வி நேரத்தில் பதில் சொல்வது அமைச்சர் களுடைய வேலை. கேள்விக்குப் பதில் சொல்வதுபோல் உறுப்பினரின் கேள்வி இருக்கிறது. அதனால் இக் கேள்வி மறுக்கப்படுகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, சென்னை நகரிலுள்ள ஒரு மகளிர் கல்லூரியில், மாணவிகளிடமிருந்து கட்டாயமாகப் பணம் வசூல் செய்ததாகப் புகார் வந்ததாகவும், அரசு அதன் மீது விசாரணை நடத்தி, மாணவிகளிடம் வசூலித்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கச் சொன்னதாகவும், அவ்வாறு கொடுக்காததால் அந்தக் கல்லூரிக்குக் கொடுக்கக்கூடிய மானியத்தை நிறுத்தி யிருப்பதாகவும் செய்தித் தாள்களில் செய்தி வந்தது. இப்போது அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் கல்லூரியிலிருந்து கட்டாயமாகப் பணம் வசூல் செய்யப்பட்ட மாணவிகளின் பட்டியல் கேட்கப்பட்டது. அவர்கள் மாணவிகளின் பட்டியலை அனுப்பி யிருக்கிறார்கள். அரசாங்கம் அந்தக் கல்லூரிக்குக் கொடுக்கும் மானியத்தி லிருந்து மாணவிகளுக்கு நேரடியாகப் பணத்தைக் கொடுப்பது பற்றி முடிவு செய்கிறது. மேற்கொண்டு பணம் வசூலிக்கக் கூடாதென்று உத்தரவிடப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் செய்தித் தாள் களில் வந்த செய்திகளை வைத்துக் கொண்டு, கேள்வி கேட்கக் கூடாது. அதற்குப் பதில் சொல்வதும், சொல்லாததும் அமைச்சர்களுடைய விருப் பத்தைப் பொறுத்தது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, சில தனியார் கல்லூரிகள் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றன. அப்படிப்பட்டக் கல்லூரிகளை, மேலும் ஊக்குவிக்கும் வகையில் அதிகமாக மானியம் வழங்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இம்மாதிரியான காரியங்களைப் பற்றி எல்லாம் பல்கலைக் கழகத்தோடு கலந்து தான் முடிவு செய்ய முடியும்.

திரு. சொ. காவேரிமணியம் : தனியார் நடத்துகிற கல்லூரியில் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் மாணவர்கள் சேர்த்துக்கொள்ள மறுக்கப்படு கிறார்கள். பொது மக்களுடைய பிரதிநிதிகள் சென்றாலும் சரியான முறையில் நடத்துவதில்லை. அவைகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்ள முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பல்வேறு ஆண்டுகளாக கிறிஸ்துவ அற நிலையங்கள், இஸ்லாமிய அறநிலையங்கள், இந்து அறநிலையங்கள் ஆகியவை சிறப்பாக கல்லூரிகளை நடத்தி வருகின்றன. ஆனால் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளாது புறக்கணிக்கப்படு கிறார்கள் என்கிற திட்டவட்டமான புகார் இருந்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்ள நமக்குப் பூரண உரிமை இருக்கிறது. பொதுமக்களுடைய பிரதிநிதி

களிடத்தில் மரியாதைக் குறையாக நடந்து கொண்டதாக கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் அதுபோன்று நடக்காமல் இருக்க முயற்சி எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : இப்படி தனியார் கல்லூரிகள், ஆசிரியர்கள் முழுமையாக பாதிக்கப்படாதிருக்க காம்ப்ரிஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டுவர அரசாங்கம் முன்வர இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தனியார் கல்லூரிகளை ஒழுங்குபடுத்த சில விதிகளை அமைக்க உத்தேசித்திருப்பதாகச் சொன்னார்கள். தனியார் கல்லூரி ஹாஸ்டல்களில் கட்டண பீஸ் மாதம் 20 ரூபாய் என்று இருக்கிறதே, அதேமாதிரி உணவுக் கட்டணமும் அதிகமாக இருக்கிறதே, இதை எல்லாம் ஒழுங்குபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கல்வி மானியத்தின் மீது இவற்றை எல்லாம் பேசலாம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிக்குக் கல்லூரி இந்தக் கட்டணம் வேறுபட்டிருக்கிறது. இதில் நியாயமான முறையில் அரசாங்கம் எப்படித் தலையிட முடியும் ? பொதுவாக சிலபல கட்டுப்பாடுகளை, வரையறைகளை ஏற்படுத்தத்தான் அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டுவருகிறது.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the fact that 90 per cent of the expenses are really met by the Government and also in view of the fact that there is a lot of mismanagement in these private institutions, will the Government seriously think of bringing in legislation to take over all the private colleges and run them?

MR. DEPUTY SPEAKER : That is the main question. The hon. Member is repeating the main question.

THIRU K. M. SUBRAMANIAM : Because of this..............

MR. DEPUTY SPAKER : Because of what?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மொத்தமுள்ள கல்லூரிகளில் 124 கல்லூரிகள் தனியார் கல்லூரிகளாக இருக்கின்றன. அந்த அந்தக் கல்லூரிகள் எவ்வளவு நிதி வசூல் செய்து போடுகிறதோ அந்த அளவுக்கு நாம் மாச்சிங் கிராண்டு என்று 85% கொடுக்கிறோம். எதிராஜ் கல்லூரியை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட 35 லட்சம் பொறுமான சொத்துக்களை அதற்கு விட்டிருக்கிறார்கள். தனியார் கல்லூரிகள் ஒழுங்காக நடைபெறுகின்றன என்றால் நமக்கு ஆட்சேபணை இல்லை. தவறு நடக்கிற இடங்களில் தான் கண்காணிப்பாக இருந்து தவறுகளுக்கு இடமளிக்காது செய்ய வேண்டியிருக்கிறது.